


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (06.03.2017) கொடியசைத்து, துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.

செ.வெ.எண்: 165/2017 நாள்: 06.03.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தட்டம்மை ரூபெல்லா விழிப்புணர்வு பேரணியினை இன்று கொடியசைத்து, தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2017 பிப்ரவரி 6-ம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை செயல்படுத்தப்பட்ட தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம் பொது மக்களின் நலன் கருதி, 2017 மார்ச் மாதம் 15-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசியின் முக்கியத்துவம் பற்றிய மருத்துவர்களின் மாபெரும் விழிப்புணர்வு பேரணியை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (06.03.2017) கொடியசைத்து, தொடங்கி வைத்து, கலந்து கொண்டார்.

இப்பேரணியானது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தொடங்கி, எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளி வரை சென்று நிறைவு பெற்றது.

இதில் ஏராளமான அரசு மற்றும் தனியார் மருத்துவர்கள் தடுப்பூசியின் நலனைப் பற்றிய கோஷங்கள் எழுப்பியவாறு ஊர்வலமாக நடந்து சென்றனர்.

இப்பேரணியில் இணை இயக்குநர் மருத்துவ பணிகள் மரு. வசந்தா, ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மருத்துவர் மரு. ராதாகிருஷ்ணன், உதவி திட்ட மேலாளர் (NHM), மரு. மகாதேவன் பிள்ளை, மாவட்ட பயிற்சி மருத்துவர் மரு. அரவிந்த், மாவட்ட தொற்று நோய் அலுவலர் மரு. கின்சால், மாவட்ட தொற்றா நோய் பிரிவு அலுவலர் மரு. ஏ. பின்னி ஆகியோர் கலந்து கொண்டனர்.